RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 14 ஜனவரி.20 2026 செவ்வாய்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

# மதுரையில் இருந்து சென்னை செல்ல ஆம்னி பேருந்துகளில் ரூ.3,000 கட்டணம் : பயணிகள் அவதி

மதுரை, ஜன.20-

மதுரையிலிருந்து சென்னைக்கு செல்ல ஆம்னி பேருந்துகளில் ரூ.3,000 வரை கட்டணம் வசூலிக்கப்பட்டதால் பயணிகள் அதிருப்தி அடைந்தனர்.

பொங்கல் பண்டிகையை கொண்டாட பல்வேறு நகரங்களிலிருந்து மதுரை உள்ளிட்ட தென் மாவட்டங்களுக்கு குடும்பத்துடன் வந்தவர்கள் விடுமுறை முடிந்த நிலையில் ஊர்களுக்கு திரும்பினர். இதனால் மாட்டுத்தாவணி, ஆரப்பாளையம் பேருந்து நிலையங்களில் பயணிகள் கூட்டம் அதிகளவில் காணப்பட்டது.

சென்னை, கோவை, திருப்பூர் உள்ளிட்ட நகரங்களுக்கும், தென் மாவட்டங்களுக்கும் வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன் 250 க்கும் மேற்பட்ட சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட்டன. பேருந்து நிலையங்களில் சிறப்பு கவுன்ட்டர்கள் அமைக்கப்பட்டு, சிறப்பு பேருந்துகளில் பயணிப்பவர்களுக்கு டிக்கெட் வழங்கப்பட்டது. அதிகாரிகள் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுவதை கண்காணித்தனர்.

இதேபோல் மதுரையில் இருந்தும், மதுரை வழியாக இயக்கப்பட்ட அனைத்து ரயில்களிலும் பயணிகள் கூட்டம் அதிகளவில் காணப்பட்டது. மதுரை ரயில் நிலையத்திலும்



பயணிகள் அதிகம் இருந்தனர். முன்பதிவு இல்லாத பெட்டிகளில் பயணிகளை வரிசையில் நிறுத்தி போலீஸார் ஏற்றிவிட்டனர்.

ஆம்னி பேருந்து: ஆம்னி பேருந்துகளில் சென்னைக்கு வழக்கமான நாட்களில் ரூ.700 முதல் ரூ.1,000 வரையும், பண்டிகை நாட்களில் ரூ.2,000 வரையும் வசூலிக்கப்படுவது வழக்கம். நேற்று வழக்கத்தை விட கூடுதலாக ரூ.3 ஆயிரம் வரை கட்டணம் வசூலிக்கப்பட்டது. சில பேருந்துகளில் ரூ.6 ஆயிரம் வரை கட்டணம் வசூலிக்கப்பட்டதாக பயணிகள் தெரிவித் தனர். ஆம்னி பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலிப்பதை தடுக்க வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என பயணிகள் குற்றம்சாட்டினர்.

வேன்களில் பயணம்: கோவைக்குச் செல்லும் பேருந்துகள் ஆரப்பாளையம் பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படுகிறது. மதுரையிலிருந்து கோவைக்கு அரசு பேருந்தில் ரூ.200 கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இந்நிலையில், கூட்டம் அதிகமாக இருப்பதை பயன்படுத்தி தனியார் வேன்கள் ரூ.500 கட்டணம் வசூலித்து பயணிகளை ஏற்றிச் சென்றனர். விதிமுறைப்படி வேன்களில் பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடாது. இருப்பினும் ஆரப்பாளையத்திலிருந்து தனியார் வேன்களில் இரவு முழுவதும் பயணிகள் ஏற்றிச் செல்லப்பட்டனர்.



# மதுரையில் கண்மாய்க்கு தண்ணீர் திறக்க கோரி பொது மக்கள் மனு

மதுரை, ஜன.20

மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா விடத்தக்குளம் கிராமத்தை சார்ந்த 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஒன்றாக சேர்ந்து மாவட்ட ஆட்சியரிடம் அளித்துள்ள மனுவில் : விடத்தக்குளம் கிராமத்தில் உள்ள விருசங்குளம் கண்மாய்க்கு நிலையூர் சம்பக்குளம் கால்வாய் நிரம்பி வழிந்த உடன் மறுகால் பாய்ந்து தண்ணீர் வருவது நடைமுறையாக உள்ளது. தற்போது அந்த கால்வாய் நிரம்பி மறுகால் பாய உள்ள நிலையில் அதை அரசு மடை மாற்றி மறுகால் துளையில் கீழ்கண்ணு வழியாக உலகாணி கண்மாயிற்கு கொண்டு செல்கிறது. இதனால் எங்கள் கண்மாய்க்கு வரவேண்டிய தண்ணீர் முறையாக வரவில்லை. இதனால் எங்களது கண்மாய் வறண்டுள்ள நிலையில் உள்ளது. இதை நம்பி உள்ள 500 ஏக்கர் விவசாய நிலம் மற்றும் கால்நடைகள் போதிய குடிநீரின்றி விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர் எனவே அரசு உரிய நடவடிக்கை எடுத்து எங்கள் கண்மாய்க்குத் தண்ணீர் கொண்டு வர என தெரிவித்துள்ளனர்.

# கிலோ ரூ.380 வரை விற்பனை: தமிழகத்தில் கோழி இறைச்சி விலை உயர்வு ஏன்?

சென்னை, ஜன.20-

கடந்த சில நாட்களாக கோழி இறைச்சியின் விலை பல மடங்கு உயர்ந்திருப்பதால், அசைவ பிரியர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

பெரும்பாலான நடுத்தர குடும்பங்களின் இறைச்சி புரதத் தேவையை, ஈடுகட்டுபவையாக கோழி இறைச்சி இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் கடந்த ந்த சில மாதங்களாக ஒரு கிலோ கோழி இறைச்சி ரூ.200 என்ற விலையில் இருந்து வந்தது. தற்போது பல மடங்கு அதிகரித்து ரூ.380 வரை எட்டியுள்ளது.

கோழித் தீ தீவனத்தின் விலை அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் விலையேற்றம் என கடைக்காரர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில், அதிகப்படியான இந்த விலையேற்றத்தால், பலரும் இறைச்சியை வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உணவகங்களும், அசைவ உணவுகளை விலையேற்றி உள்ளனர். இறைச்சி விற்பனையில் ஈடுபட்டுள்ள கடைக்காரர்கள் கூறும்போது. "கறிக் கோழி பண்ணை விவசாயிகள்



கோழிக் குஞ்சுகளை வளர்க்க கூலியாக ரூ.6.50 மட்டும் வழங்குவதை கண்டிக்கும். ரூ.20 வழங்க வலியுறுத்தியும் கடந்த 1ம் தேதி முதல் போராட்டத்தை தொடங்கியிருப்பதால், இந்த விலையேற்றம் என்று சொல்லப்படுகிறது.

இறைச்சி விற்பனை கடைகளில் கோழி இறைச்சி ரூ.320 முதல் ரூ. 360 வரை விற்கப்படுகிறது. தோல் நீக்கிய கோழி இறைச்சி சில இடங்களில் ரூ.380 வரை விற்கப்படுகிறது.

அதேபோல் இந்த விலையேற்றத்தின் காரணமாக மீன் வாங்கி பயன்படுத்தலாம் என நினைத்தால் மத்தி, கட்லா, பாறை உள்ளிட்ட சில ரகங்கள் மட்டுமே விலை குறைந்த நிலையில் உள்ளன. எஞ்சிய ரக மீன்கள் அதிக விலைக்கு விற்கப் படுவதால், மீன் வாங்கவும் பலரும் விருப்பம் காட்டவில்லை.

மேலும் நேற்றைய தினம் தை அமாவாசை என்பதால் இறைச்சி கடைகளில் கூட்டம் இல்லை.இனி வரும் நாட்களில் இறைச்சியின் விலை அதிகரிக்கும் நிலை இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் இறைச்சி நுகர்வோர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். அதேபோல் இந்த விலையேற்றத்தின் காரணமாக பொதுமக்களின் நுகர்வும் குறையும். இது வியாபாரிகளுக்கும் பாதிப்பே" என்றனர்.

# தமிழகம் முழுவதும் 35 ரயில்களுக்கு கூடுதல் நிறுத்தம் விரைவில் வெளியாகிறது அறிவிப்பு

சென்னை, ஜன.20-

தமிழகம் முழுவதும் 35 ரயில்களுக்குக் கூடுதல் நிறுத்தங்கள் அளிக்க இந்திய ரயில்வே உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ளது. தெற்கு ரயில்வேயில் முக்கிய வழித்தடங்களில் ஓடும் விரைவு ரயில்கள், பாசஞ்சர் ரயில்களுக்கு பயணிகளின் தேவை அடிப்படையில் கூடுதல் நிறுத்தங்களை வழங்க பயணிகள், சமூக ஆர்வலர்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதற்கிடையில் 29 விரைவு ரயில்களுக்கும், 6 பாசஞ்சர் ரயில்களுக்கும் கூடுதல் நிறுத்தங்களை வழங்க ரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.



சென்னை கோயம்புத்தூர் கோவை விரைவு ரயில், சென்னை பெங்களூரு டபுள் டெக்கர் ரயில் ஆகிய ரயில்களுக்கு திருவள்ளூர் நிலையத்தில் நிறுத்தம் வழங்கப்படவுள்ளது.

சென்னை ஜோலார் பேட்டை விரைவு ரயில் இனி அம்பத்தூரில் நின்று செல்லும். அதே நேரம் சென்னை எழும்பூர் சத்ரபதி சிவாஜி மகாராஜ் டெர்மினஸ் விரைவு ரயிலுக்கு அரக்கோணத்தில் நிறுத்தம் வழங்கப் படவுள்ளது.

மங்களூர் சென்னை சென்ட்ரல் விரைவு ரயில், திருவனந்தபுரம் சென்னை சென்ட்ரல், அகமதாபாத் சென்னை சென்ட்ரல், புதுச்சேரி காச்சிகுடா, செங்கல்பட்டு காச்சிகுடா உள்ளிட்ட ரயில்களுக்கு பெரம்பூரில் நிறுத்தம் வழங்கப்படவுள்ளன.

நிறுத்தம் வழங்கப்படவுள்ள 29 விரைவு ரயில்களில் மெயில், அதி விரைவு, அந்த்யோதயா ரயில் ஆகியவை அடங்கும். இதுதவிர சென்னை மும்பை, சென்னை விஜயவாடா, பெங்களூரு கன்னியாகுமரி போன்ற நீண்ட தூர மாநிலங்களுக்கு இடையேயான ரயில் சேவைகளும் அடங்கும். இதுதவிர, மெட்ரோ ரயில் இணைப்பு உள்ள விம்கோ நகரில் சென்னை விஜயவாடா பினாகினி விரைவு ரயில், விஜயவாடா ஜன சதாப்தி விரைவு ரயில் மற்றும் பித்ரகுண்டா சென்னை சென்ட்ரல் பயணிகள் ரயில் ஆகியவற்றுக்கு நிறுத்தம் வழங்குவதும் அடங்கும். சென்னை எழும்பூர் கன்னியாகுமரி விரைவு ரயிலுக்கு கோவில்பட்டியில் நிறுத்தம் வழங்கப் படவுள்ளது.

இந்த நடவடிக்கை மூலமாக, சென்னை சென்ட்ரல், எழும்பூர் ஆகிய ரயில் நிலையங்களில் ஏற்படும் நெரிசல் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுதவிர, பயணிகள் முக்கிய ரயில் முனையங்களுக்குப் பயணிக்காமலேயே நீண்ட தூர ரயில்களை எளிதாக பிடிப்பதற்கு உதவும்.


இதுகுறித்து ரயில்வே அதிகாரி ஒருவர் கூறுகையில், "இந்த புதிய நிறுத்தங்கள் அமல்படுத்தப்படும் தேதி விரைவில் அறிவிக்கப்படும்" என்று தெரிவித்தார்.

# 'பராசக்தி' படத்தில் வரும் செழியன் நான்தான் சீமான்

சென்னை, ஜன.20-

"'பராசக்தி' படத்தில் வரும் செழியன் நான்தான். தமிழ் வாழ்க என சிவகார்த்திகேயன் கத்துவதைப் பார்க்கும்போது, நானே கத்தியது போல இருந்தது" என நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியான 'பராசக்தி' படத்தைப் பார்த்த பிறகு நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேட்டியளித்தார். அப்போது பேசிய அவர், "தமிழ் வாழ்க என சிவகார்த்திகேயன் கத்துவதைப் பார்க்கும்போது, நானே கத்தியது போல இருந்தது.





'பராசக்தி' படத்தில் வரும் செழியன் நான்தான்.

ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் மொழி முக்கியம். விரும்பினால் எந்த மொழியையும் கற்போம். தேவை என்றால் நிச்சயம் வேறு மொழிகளை கற்போம். ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள அதிகபட்சமாக ஆறு முதல் ஏழு மாதங்கள் ஆகும். தேவை ஏற்படும்போது அதை கற்கத் தானே போகிறோம்.

அதை விட்டுவிட்டு ஒரு மொழியைக் கட்டாயம் படிக்க வேண்டும் எனச் சொல்வதை நிச்சயம் ஏற்க முடியாது. அது சரியாகவும் இருக்காது. அனைத்து மொழிகளையும் மதிக்க வேண்டும். வலுக்கட்டாயமாக இந்தி திணிப்பைச் செய்யக்கூடாது என்பதற்கு கேரளா, வங்காளம் என அனைத்து மாநிலங்களிலும் இருந்து எதிர்ப்பு இருந்ததாகவே இந்தப் படம் சொல்கிறது. இறுதியாக ஒரு படம் முடியும் தருவாயில் 'தமிழ் வாழ்க' என வருகின்றதென்றால் அதை பாராட்டியாக வேண்டும்.

மொழிப் போராட்ட உணர்வை எடுத்துக்கொண்டு திரைக்கதையைக் கற்பனையாக உருவாக்கியுள்ளனர். 'பராசக்தி' படத்தை பெண் இயக்குநர் நன்றாக இயக்கியுள்ளார். அவர் இயக்கிய மூன்று படங்களையும் பார்த்துள்ளேன். இது ஒரு பெரிய முயற்சி.

படத்தில் சிவகார்த்திகேயன், ரவி மோகன், அதர்வா என அனைவரும் சிறப்பாக நடித்திருக்கிறார்கள். ஜி.வி பிரகாஷின் பின்னணி இசை, பாடல் மிகச் சிறப்பாக இருந்துள்ளது. மொத்தத்தில் 'பராசக்தி' ஒரு நல்ல படமாக வெளிவந்துள்ளது. ஒளிப்பதிவும் நன்றாக உள்ளது. ஆனால் அவர்கள் மொழிப் போரை அப்படியே காட்டவில்லை. இது நமது மொழிப்போர் வரலாறும் இல்லை. அதேநேரம் அப்படம் மொழி உணர்வைச் சிதைக்கவும் இல்லை" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# "திமுக கண் துடைப்புக்காக ஆம்னி பேருந்து கட்டண உயர்வை எச்சரிக்கிறது" : நயினார் நாகேந்திரன்

சென்னை, ஜன.20-

"பொங்கல், தீபாவளி என அனைத்துப் பண்டிகைக் காலங்களிலும், ஆம்னி பேருந்துக் கட்டணம் விண்ணைத் தொடுவதும், தென்மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு அரசு பேருந்துகள் குறைவாக இயக்கப்படுவதும், கண் துடைப்புக்காக திமுக அமைச்சர்கள் ஆம்னி கட்டண உயர்வை எச்சரிப்பதும் தொடர்கதையாகி வருகிறதே தவிர, மக்களின்



பணம் சுரண்டப்படுவது நின்றபாடில்லை" என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நேற்று நெல்லையில் இருந்து சென்னை வருவதற்கான ஆம்னி பேருந்தில் ஒரு நபருக்கு ரூ.7,500 வரை கட்டணம் வசூலிக்கப்பட்டதாக வெளிவந்துள்ள தகவல் மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது.

பொங்கல், தீபாவளி என அனைத்துப் பண்டிகைக் காலங்களிலும், ஆம்னி பேருந்துக் கட்டணம் விண்ணைத் தொடுவதும், தென்மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு அரசு பேருந்துகள் குறைவாக இயக்கப்படுவதும், கண் துடைப்புக்காக திமுக அமைச்சர்கள் ஆம்னி கட்டண உயர்வை எச்சரிப்பதும் தொடர்கதையாகி வருகிறதே தவிர, மக்களின் பணம் சுரண்டப்படுவது நின்றபாடில்லை.

பண்டிகை தினத்தன்று தன் சொந்த ஊருக்குச் சென்றுவிட்டுத் திரும்ப நினைக்கும் ஒரு குடும்பத்தின் மாதச் சம்பளத்தை ஆம்னி பேருந்துக் கட்டணம் மூலம் பறித்துவிட்டு வேடிக்கை பார்க்கும் திமுக அரசை, நடுத்தர வர்க்க மக்களின் வயிற்றெரிச்சலே விரைவில் வீழ்த்தும்" என்று தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.கோபு, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அபிநயா, மாவட்ட வழங்கல் அலுவலர் கீதாராணி, உள்ளிட்ட பலர் உள்ளனர்

# தாம்பரம் மாநகர மாணவரணி மற்றும் தாம்பரம் மேற்கு பகுதி மாணவரணி சார்பில் மாபெரும் கால்பந்து போட்டி நடைபெற்றது





தாம்பரம், ஜன.20-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர மாணவரணி, தாம்பரம் மேற்கு பகுதி மாணவரணி சார்பில் மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் குட்டி (எ) தினேஷ்குமார் அவர்கள் தலைமையில், பகுதி மாணவரணி அமைப்பாளர் சந்தோஷ் அவர்கள் வரவேற்புரையில் நடைபெற்ற மாபெரும் கால்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.அ. ராஜா அவர்கள் கலந்து கொண்டு கோப்பை மற்றும் ரொக்க பரிசு வழங்கினார் இந்நிகழ்வில் 5வது மண்டலக்குழு தலைவர், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.இந்திரன், 4வது மண்டல குழு தலைவர் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ், மேற்கு பகுதி துணை செயலாளரும் தலைமை கழக பேச்சாளருமான கி.வேல்மணி, மாநகர விளையாட்டு அணியின் அமைப்பாளர் எஸ்.ஜி.கருணாகர பாண்டியன், மாநகர பிரதிநிதி லோகேஷ், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வீ.கார்த்திக், வே.சிவசுப்பிரமணியன், மாநகர மாணவரணி அமைப்பாளர் எஸ்.கார்த்திக், வட்ட செயலாளர் கே.ரமேஷ்பாபு, வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# கிருஷ்ணகிரி மாவட்ட மகளிர் அதிகார மையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் 3 பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

கிருஷ்ணகிரி, ஜன.20-

கிருஷ்ணகிரி மாவட்ட மகளிர் அதிகார மையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் 3 பணியிடங்களுக்கு விண்ண ப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இது குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மத்திய அரசின் திட்டங்கள் திறன்பட செயல்படுத்தப்படுவதையும், திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு பயன்பாட்டு சான்று அடிப்படையில் கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்தவும் பயனாளிகள் மற்றும் திட்டப்பலன்கள் கண்காணிக்கவும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் மாவட்ட மகளிர் அதிகார மையம் கடந்த 2023ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், மாவட்ட மகளிர் அதிகார மையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நிதிகல்வியறிவு வல்லுநர், பாலின வல்லுநர், பல்திறன் பணியாளர் ஆகியோர் தேர்வு செய்யப்பட உள்ளனர். இம்மூன்று பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அதன்படி, நிதிகல்வியறிவு வல்லுநர் பணிக்கு பொருளாதாரம்(அ) வங்கியியல்(அ) இதர ஒத்த துறைகளில் பட்டமும், 3 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். ஒப்பந்த அடிப்படையில் மாத ஊதியம் ரூ.21 ஆயிரம் வழங்கப்படும். பாலினவல்லுநர் பணியிடத்திற்கு சமூகப் பணி அல்லது பிற சமூகத் துறைகளில் பட்டமும், 3 ஆண்டு அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். மாத ஊதியம் ரூ.21 ஆயிரம் வழங்கப்படும். இதே போல், பல்திறன் பணியாளர் பணியிடத்திற்கு 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மாத ஊதியம் ரூ.12 ஆயிரம் வழங்கப்படும். 3 காலிபணியிடங்களுக்கு வயது வரம்பு 35க்குள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இப்பதவிக்கு உரிய சான்றிதழ்களுடன் வருகிற 23ம் தேதி மாலை 5 மணிக்குள் அறைஎண்: 21 மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட கலெக்டர் அலுவலகம், கிருஷ்ணகிரி என்ற முகவரியில் நேரடியாக விண்ணப்பம் அளிக்க வேண்டும். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

# பல்லாவரம் வடக்கு பகுதி 17வது வார்டு திமுக சார்பில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா





பல்லாவரம், ஜன.20-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட 17வது வார்டு திமுக நிர்வாகி முன்னாள் வட்ட செயலாளர் வழக்கறிஞர் பி.ஜி.பிரபு அவர்கள் ஏற்பாட்டில் 17வது வார்டு கழக நிர்வாகிகளுக்கு சுமார் 700 நபர்களுக்கு சில்வர் ட்ரம், புடவை, பேண்ட் சர்ட், சட்டை லுங்கி மட்டும் கரும்பு உள்ளிட்ட பொருட்களை வழங்கினார் அதனை தொடர்ந்து அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களுடன் இணைந்து மேளதாளம் முழுக்க ஊர்வலமாக நடந்து சென்று உற்சாகமாக பொங்கல் கொடுத்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர்

இதில் பல்லாவரம் வடக்கு பகுதி நிர்வாகிகள், மாநகர அணிகளின் துணை அமைப்பாளர்கள், 17வது வார்டு நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# ஒசூர் வருகை புரிந்த திமுக 2026 சட்டமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவிடம் கிருஷ்ணகிரி மேற்கு மற்றும் கிழக்கு நகரத்திற்கு பல்வேறு கோரிக்கைகளை அடங்கிய மனு




ஒசூர், ஜன.20-

நேற்று ஒசூர் வருகை புரிந்த திமுக 2026 சட்டமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவிடம் கிருஷ்ணகிரி மேற்கு மற்றும் கிழக்கு நகரத்திற்கு பல்வேறு கோரிக்கைகளை அடங்கிய மனுவை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கிருஷ்ணகிரி மேற்கு நகர கழக செயலாளர் என்.அஸ்லம் மற்றும் கிழக்கு நகர கழக செயலாளர் எம்.வேலுமணி ஆகியோர் கழக துணை பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களின் தலைமையிலான சட்டமன்ற தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவிடம் வழங்கினார்கள்.

அறிக்கைகள் விவரம் :

* கிருஷ்ணகிரி மாவட்டத்தின் தலைமையிடமான கிருஷ்ணகிரி சிறப்பு நிலை நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தித் தர வேண்டும்.

* கிருஷ்ணகிரி நகராட்சியில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருவதால் மக்களின் அன்றாட குப்பைகளை அகற்ற நகராட்சிக்கு என்று தனி குப்பைக் கிடங்கு எதுவும் இல்லாமல் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும், நோய்த்தொற்றுக்கும் பெரும் காரணமாக உள்ளது. ஆகையால் நகராட்சிக்கு என்று ஒரு தனி குப்பைக் கிடங்கு ஊருக்கு ஒதுக்குப்புறமாக அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

* கிருஷ்ணகிரி அரசு கல்லூரி மருத்துவமனை கிருஷ்ணகிரி நகரத்திலிருந்து 16 கிலோமீட்டர் தொலைவில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளதால் நகராட்சிக்குட்பட்ட பெரும்பாலான புறநோயாளிகள் மருத்துவமனைச் செல்வதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. இதைச் சரி செய்யும் வகையில் நூறு படுக்கை கொண்ட ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டுகிறோம்.

* கிருஷ்ணகிரி நகரத்திற்கு உட்பட்ட சேலம் ஜங்ஷன் அருகே அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலை சேலம், பெங்களூர், சென்னை, திருவண்ணாமலை ஆகிய பகுதிகளை இணைக்கும் முக்கிய சாலையாகும். இப்பகுதியில் நாள்தோறும் மிகமிக கனரக வாகனங்கள், பேருந்துகள், அதிகளவிலான வாகனங்கள் கடந்து செல்வதால் மிகக்கடுமையான போக்குவரத்து நெரிசல் மற்றும் அதிக விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன. இதை சரி செய்யும் வகையில் இரண்டடுக்கு மேம்பாலம் அல்லது வளைவு மேம்பாலம் அமைத்து போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்தைத் தடுக்கும் வகையில் உடனடி நடவடிக்கை எடுத்துத் தர வேண்டுகிறோம்.

* கிருஷ்ணகிரி நகராட்சிக்கென்று எந்த ஒரு கனரக வாகனமோ, மினி ஹிட்டாச்சி, ஜேசிபி, என எந்த ஒரு அடிப்படை வாகன வசதியும் சொந்தமாக இல்லாத காரணத்தினால் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளைத்தூய் மைப்படுத்தவும் சாக்கடைகளைத் தூர்வாரவும் மிகக் கடுமையாக சிரமப்பட்டு வருகிறது. இதைச் சரி செய்யும் வகையில் போர்க்கால அடிப்படையில் இதற்கான நிதியை வழங்கி செய்து தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

* கிருஷ்ணகிரி நகராட்சியைச் சுற்றியும் கிராமப்புற பகுதிகளைச் சார்ந்து உள்ளதால் பெரும்பாலான விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளைவிக்கும் விவசாயப் பொருட்களை நகராட்சி தெருக்களில் கடைகள் அமைத்தோ அல்லது தெரு ஓரமாக நின்றோ வியாபாரம் செய்து வரும் அவலநிலை ஏற்பட்டு வருகிறது. அதனை சரி செய்யும் வகையில் அவர்களுக்கென்று ஒரு பெரிய காய்கறி மார்க்கெட் மற்றும் பூ மார்க்கெட் அமைத்துக் கொடுத்தால் விவசாயிகளின் வாழ்வாதாரமும் நகராட்சி மக்களின் தேவைகளுக்கு ஒரே இடத்தில் செல்வதற்கான வழிவகை செய்யப்படும்.

*கிருஷ்ணகிரி ஒன்றிய பகுதிகளில் கலைஞர் கனவு இல்லம் என்ற திட்டத்தின் மூலம் பல ஏழை மக்களுக்குக் கழக அரசு பல லட்சம் வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறது. ஆனால் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பல ஏழை மக்கள் இன்றும் வசிக்க இடமில்லாமல் தவித்து வருகின்றனர். நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தொகுப்பு வீடு ஐந்தாண்டிற்கு ஒரு முறையே வழங்குவதால், பெரும்பாலான ஏழை மக்களுக்கு இத்திட்டம் சென்றடைவதில்லை. ஆகையால், ஒவ்வொரு ஆண்டும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

* கிருஷ்ணகிரி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கிருஷ்ணகிரி பேருந்து நிலையம் அருகே உள்ள சின்ன ஏரியில் படகு இல்லம் அமைத்து நடைப்பயிற்சிப் பகுதி மற்றும் பூங்கா அமைத்துத் தர வேண்டுகிறோம்.

* விரைவில் கிருஷ்ணகிரி நகராட்சியுடன் இணைக்கப்பட உள்ள கட்டிகானப்பள்ளி பகுதி ஒரு துணை நகரமாகவே செயல்பட்டு வருகிறது. இப்பகுதியில், பெரும்பாலான அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் நபர்கள் அதிகம் வசித்து வருகின்றனர். இருப்பினும், இங்கு அதிக முட்புதர்கள் மண்டியுள்ளன. அடிப்படை வசதிகள் இன்றி நச்சுபிபூச்சிகளும் பாம்புகளும் பொதுமக்களுக்கு இடையூறாக இருந்து வருகின்றன. இப்பகுதியின் நீண்ட நாள் கோரிக்கையான தார்ச் சாலை வசதி, கால்வாய் அமைத்தல் (பாதாள சாக்கடை), மின்விளக்கு வசதி மற்றும் அப்பகுதி குடியிருப்புவாசிகளின் அருகே அமைந்துள்ள குப்பைக் கிடங்கை அகற்றிப் பூங்காவாக மாற்றித் தர வேண்டுகிறோம். இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்ட துணைச் செயலாளர் சாவித்திரி கடலரசு மூர்த்தி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



# மானாமதுரை துணை மின் நிலையத்தில் நாளை மின்தடை

சிவகங்கை, ஜன.20-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை துணை மின் நிலையத்தில் நாளை (ஜன21) (புதன்கிழமை) அன்று மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் மானாமதுரை, சிப்காட், இராஜகம்பீரம், முத்தனேந்தல், இடைக்காட்டூர், மிளகனூர், கட்டிக்குளம்,தெ.புதுக்கோட்டை, முனைவென்றி, குறிச்சி, கச்சாத்தநல்லூர், நல்லாண்டிபுரம், சங்கமங்கலம், அன்னவாசல், கீழப்பசலை ஆகிய பகுதியில் காலை 10.00மணி முதல் மதியம் 02.00மணி வரை மின் வினியோகம் இருக்காது என மின்செயர் பொறியாளர் அறிவித்துள்ளார்..

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவராகஎம்.சி. இரகு நியமிக்கப்பட்டார்



கிருஷ்ணகிரி, ஜன.20-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதியை சேர்ந்த காங்கிரஸ் தியாகி எம்.சென்னையன் என்பவரது மகனாக 1969ல் பிறந்த எம். சி. இரகு மாணவர் பருவத்தில் 1991 முதல் 1996 சென்னை பச்சையப்பா கல்லூரியில் B.Com படிக்கும் போது மாணவர் காங்கிரஸ் தலைவராக பணியாற்றி வந்த நிலையில் காங்கிரஸ் கட்சியின் கொள்கையினால் ஈர்க்கப்பட்டார், பின்னர் கல்லூரி படிப்பை முடிந்த எம்.சி. இரகு 1996 முதல் 2000 வரை கிருஷ்ணகிரி மாவட்ட இளைஞர் காங்கிரஸ் செயலாளராக பணியாற்றி வந்த இவரை 2001ல் மாநில பொதுக்குழு உறுப்பினராக அன்னை சோனியா காந்தியால் நியமிக்கப்பட்டார்,

தொடர்ந்து 2006 முதல் 2016 வரை கிருஷ்ணகிரி மாவட்ட காங்கிரஸ் கட்சியின் பெருளாளராகவும் பணியாற்றினார்.

பின்னர் 2017 ல் மீண்டும் காங்கிரஸ் கட்சியில் மாநில பொதுக் குழு உறுப்பினராக இளம் தலைவர் ராகுல் காந்தியால் எம்.சி. இரகு நியமிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து 2024ல் முதல் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் பொறுப்பாளராகவும், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட காங்கிரஸ் கிராம கமிட்டி சீரமைப்பின் பொறுப்பாளராகவும் செயல் பட்டு வந்த வந்த எம்.சி. இரகு அவர்களை தற்போது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவராக புதியதாக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடதக்கது.



# சமூக நல்லிணக்க ஊராட்சி விருதுக்கான பாராட்டு விழா

ராமநாதபுரம், ஜன.20-

ராமநாதபுரம் மாவட்டம் மேலமடை ஊராட்சிக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் சமூக நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையை சிறப்பாக நடைமுறைப்படுத்தியதற்காக 2025ஆம் ஆண்டிற்கான "சமூக நல்லிணக்க ஊராட்சி விருது" தமிழ்நாடு அரசு சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கினார். சமூக ஒற்றுமை, சகிப்புத் தன்மை மற்றும் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அனைத்து சமூக மக்களையும் ஒருங்கிணைத்து செயல்பட்ட மேலமடை ஊராட்சியின் செயல் பாடுகள் அரசின் கவனத்தை ஈர்த்ததன் விளைவாக இந்த விருது வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த விருதிற்குப் பரிந்துரை செய்த ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட செயலாளருமான காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு மேலமடை கிராம மக்கள் சார்பாக நன்றி பாராட்டும் விழா நடத்தப்பட்டது. விழாவில் மேலமடை அனைத்து மகளிர் சங்கத்தைச் சேர்ந்த பெண்கள் ஒரே வடிவில் பாரம்பரிய சேலை அணிந்து சட்டமன்ற உறுப்பினர் மற்றும் அரசு அதிகாரிகளை பூக்கள் சூட்டி புன்னகையுடன் வரவேற்றது அனைவரின் பாராட்டையும் பெற்றது.

விழாவில் ஆசிரியர் இராமு, மேலமடை கிராமத் தலைவர் ஆர். ஜெயசர் வந்தம், பகவதி பால்ராஜ், திருப்புல்லாணி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜேஸ்வரி, சந்திர மோகன், திருப்புல்லாணி முன்னாள் ஒன்றிய தலைவர் புல்லாணி, மேலமடை ஊராட்சி கிராம பொதுமக்கள், அனைத்து இளைஞர் மன்றம், அனைத்து மகளிர் மன்றம் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் மற்றும் திமுக கழக நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், 26.01.2026 அன்று மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ள குடியரசு தின விழாவையொட்டி முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.தினேஷ் குமார் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.




## சாலை பாதுகாப்பு மாதம் வாசன் கண் மருத்துவமனையில் 1000 ஓட்டுநர்களுக்கு இலவச கண்புரை அறுவை சிகிச்சை இலவச கண் பரிசோதனை

கோவை, ஜன.20-

சாலை பாதுகாப்பு மாதத்தினை முன்னிட்டு, இந்தியா முழுவதும் வாசன் கண் மருத்துவமனைகளில் இலவச கண் பரிசோதனை மற்றும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில் அமைந்துள்ள வாசன் கண் மருத்துவமனை கிளையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் அனுஷா வெங்கட்ராமன் கலந்து கொண்டு பேசினார்.

அவர் கூறுகையில், இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 11 முதல் பிப்ரவரி 11 வரை சாலை பாதுகாப்பு மாதம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், வணிக வாகன ஓட்டுநர்கள் தினமும் நீண்ட நேரம் சாலைகளில் பயணித்து வருகிறார்கள். அவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, வாசன் கண் மருத்துவமனை சார்பில் சிறப்பான முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அதன்படி, சுமார் 1000 வணிக வாகன ஓட்டுநர்களுக்கு இலவசமாக கண்புரை அறுவை சிகிச்சை வழங்கப்பட உள்ளது. மேலும், பள்ளி மற்றும் கல்லூரி வாகன ஓட்டுநர்களுக்கும் இலவச கண் பரிசோதனை செய்யப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். இந்த வாய்ப்பை அனைத்து வணிக ஓட்டுநர்களும் பயன்படுத்திக் கொண்டு பயன் பெற வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து பேசிய அவர், ஓட்டுநர்கள் ஆறு மாதத்திற்கு ஒருமுறை கட்டாயமாக கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்றும், தேவையான கண் கண்ணாடிகளை சரியான அளவுகளில் பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

முன்னர் 60 வயதிற்கு மேற்பட்டவர்களிடையே அதிகமாக காணப்பட்ட கண்புரை, சமீப காலங்களில் 45 வயதிலிருந்தே ஏற்படத் தொடங்கியுள்ளது. எனவே, கண்புரையை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை மேற்கொள்வது மிகவும் அவசியம் என அவர் வலியுறுத்தினார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில், கண்புரை அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஜெயமணிகண்டன், குழந்தைகள் கண் மருத்துவர் டாக்டர் ஜனனி, வர்த்தக பொது மேலாளர் விஜயன், பொது மேலாளர் வெங்கடேசன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.





## காரைக்குடியில் பாஜக பிரச்சார கூட்டதில் மோடி பொங்கல் விழா - மத்திய அரசின் சாதனை விளக்கம் செய்யப்பட்டது

காரைக்குடி, ஜன.20-

சிவகங்கை மாவட்ட முன்னாள் இராணுவ வீரர் பிரிவு மற்றும் காரைக்குடி மாநகர் தெற்கு பாஜக சார்பில் மோடி பொங்கல் விழா, மத்திய பாஜக அரசின் சாதனை விளக்க கூட்டம் மற்றும் 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சார கூட்டம் ஆகியவை காரைக்குடி மாநகர் சந்தைப்பேட்டை அருகே நடைபெற்றது.,மோடி பொங்கல் விழாவை முன்னிட்டு பெண்கள் பாரம்பரிய முறையில் பொங்கல் வைத்தனர். பெண்கள், சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாஜக சிவகங்கை மாவட்ட தலைவர் திரு. பாண்டித்துரை அவர்கள் பரிசுகளை வழங்கினார்.,கூட்டத்தில் பேசிய திரு. பாண்டித்துரை அவர்கள்,

மத்திய பாஜக ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டிற்கு அதிக எண்ணிக்கையிலான மருத்துவக் கல்லூரிகள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்பட்டு ள்ளதாகவும் தெரிவித்தார். கடந்த 11 ஆண்டுகளில் மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு பல்வேறு திட்டங்கள் மூலம் 15 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான நலத்திட்ட நிதிகளை வழங்கியுள்ளதாக கூறினார்., மேலும் காரைக்குடி- மதுரை வழித்தடத்தில் அதிக எண்ணிக்கையிலான ரயில்கள் இயக்கப்பட வேண்டும் என மத்திய ரயில்வேத் துறை அமைச்சரிடம் முறையிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.,சந்தைப்பேட்டை பகுதியில் குடியிருப்புகள், பள்ளிக்கூடங்கள் மற்றும் கோவில்கள் அதிகம் உள்ள நிலையில், அதே பகுதியில் அரசு டாஸ்மாக் மதுபானக் கடை செயல்பட்டு வருவதால் சமூக விரோத செயல்கள் மற்றும் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதாகவும், பெண்கள் வெளியில் வர அச்சம் அடைகின்றனர் எனவும் கூறினார். அதிமுக-பாஜக கூட்டணி ஜூன் மாதத்தில் தமிழகத்தில் ஆட்சிக்கு வந்ததும், இந்த பகுதியில் செயல்பட்டு வரும் டாஸ்மாக் கடை நிரந்தரமாக மூடப்படும் என உறுதியளித்தார்.,மேலும் சந்தைப்பேட்டை சுற்றுவட்டார பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும் என்றும், குண்டும் குழியுமாக உள்ள சிமெண்ட் மற்றும் தார் சாலைகள் சீரமைக்கப்பட்டு புதிய சாலை வசதிகள் செய்து தரப்படும் என்றும் தெரிவித்தார்.

## இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்) மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

இராமநாதபுரம், ஜன.20-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (19.01.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 229 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கை யினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொதுமக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒருமாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொதுமக்கள் வழங்கும் மனுக்களுக்கு துறைசார்ந்த அலுவலர்கள் சிறப்பு கவனம் எடுத்து செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வ.சங்கரநாராயணன் அவர்கள், மாவட்ட சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி. கிருஷ்ணகுமாரி அவர்கள், உதவி ஆணையர் (கலால்) திருமதி.கங்காதேவி அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை கூட்டு மின் தொகுப்பு துணை மின் நிலையத்தில் இன்று மின்தடை




சிவகங்கை, ஜன.20-

சிவகங்கை கூட்டு மின் தொகுப்பு துணை மின் நிலையத்தில் மின் பராமரிப்பு பணி நடைபெற இருப்பதால் சிவகங்கை நகர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்கள் முத்துப்பட்டி, காஞ்சிரங்கால், காமராஜர் காலனி, பையூர், வந்தவாசி, கூத்தாண்டன், வாணியங் குடி, கீழக்க ண்டணி, சுந்தரநடப்பு, சோழபுரம் மற்றும் சூரக்குளம் ஆகிய ஊர்களுக்கு இன்று (ஜன 20) காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை மின் விநியோகம் இருக்காது என மின் செயற்பொறியாளர் அறிவித்துள்ளார்.

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தலைமையில் நடைபெற்றது



சிவகங்கை, ஜன.20-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்க ளிடமிருந்து 225 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள் உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## பண்ணவாடிக்கு வலசை வந்த அரிய வகை சாம்பல் உப்புக்கொத்தி பறவை

சேலம், ஜன.20-

சேலம் மாவட்டத்தில் சாம்பல் உப்புக்கொத்தி முதல் முறையாக பதிவாகியிருப்பதும், இது போன்ற அரிய பறவைகள் பண்ணவாடிக்கு வருகை தந்திருப்பதும், பறவை மற்றும் இயற்கை ஆர்வலர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத் தியுள்ளது.

குளிர்காலம் தொடங்கும் காலகட்டத்தில், ஐரோப்பிய கண்டப் பகுதிகளில் வாழும் லட்சக்கணக்கான பறவைகள் உணவுத் தேடல் மற்றும் காலநிலை மாற்றத்தின் காரணமாக மிதவெப்பமண்டல நாடுகளை நோக்கி வலசை வருவது வழக்கம். அந்த வகையில், சேலம் மாவட்டத்தில் முதல் முறையாக சாம்பல் உப்புக்கொத்தி என்ற அரிய வலசைப் பறவை, மேட்டூர் அருகே பண்ணவாடி நீர்த்தேக்கப் பகுதியில் பதிவாகியுள்ளது. இதனை 'சிறகுகள் மற்றும் இயற்கை கழகம்' சார்ந்த பறவை ஆர்வலர்கள் மற்றும் செந்தில்குமார் மற்றும் ஷாஜான் ஆகியோர் பதிவு செய்தனர். இதுகுறித்து அவர்கள் கூறியதாவது: சாம்பல் உப்புக்கொத்தி என்ற அரிய வலசைப் பறவை வலசைக் காலங்களில் மட்டுமே காணப்படும். ஐரோப்பிய பகுதிகளிலிருந்து கடல் பகுதிகளை நோக்கி நீண்ட தூரம் வலசை செய்யும் போது இடைப்பட்ட நாடுகளில் உள்ள ஏரிகளில் தங்கி ஓய்வெடுப்பது வழக்கம். அந்த வகையில், கடலை நோக்கி பயணித்த இந்தப் பறவை பண்ணவாடி நீர்த்தேக்கத்தைக் கண்டதும் இங்கு இறங்கி சில நாட்கள் தங்கியிருக்கக் கூடும். பொதுவாக இப்பறவை குளிர்காலங்களில் இந்தியா, இலங்கை மாலத்தீவு உள்ளிட்ட பகுதிகளின் கடலோரப் பகுதிகளுக்கு வலசையாக வருவது குறிப்பிடத்தக்கது. என்றனர்.





## அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கண்டுப்பட்டி மஞ்சுவிரட்டு விழாவினை கொடியசைத்து துவக்கி வைத்தார்

சிவகங்கை, ஜன.20-

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், கண்டுப்பட்டி கிராமத்தில், பொங்கல் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற மஞ்சுவிரட்டு விழாவினை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டுக்களில் ஒன்றாகத் திகழ்ந்து வரும் ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு ஆகியவைகள் ஆண்டுதோறும் தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவினை முன்னிட்டு, அனைத்துக் கிராமப்புறப் பகுதிகளிலும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றன. அதில் குறிப்பாக, வரலாற்று சிறப்பு மிக்க நமது சிவகங்கை மாவட்டத்தில், பல்வேறு கிராமப்புறப் பகுதிகளில் ஜல்லிக்கட்டு மற்றும் மஞ்சுவிரட்டு நிகழ்ச்சிகள் தமிழர் திருநாள் பொங்கல் விழாவினை முன்னிட்டு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதில், கண்டுப்பட்டி மஞ்சுவிரட்டு நிகழ்ச்சியும் புகழ் பெற்ற ஒன்றாக திகழ்ந்து வருகிறது.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டை எவ்வித இடையூறுன்றி சிறப்பாக தமிழகத்தில் நடத்திட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட அனைத்து நடவடிக்கையின் அடிப்படையில், தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் பொங்கல் திருநாளை முன்னிட்டு, ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில், கண்டுப்பட்டி கிராமத்தில் ஆண்டுதோறும் நடைபெற்று வரும் மஞ்சுவிரட்டு நிகழ்ச்சி இன்றையதினம் சிறப்பாக நடைபெறுகிறது. இவ்விழாவில் பங்கேற்பதற்கென அரசின் அனைத்து வழிகாட்டு நெறிமுறைகளுக்கும் உட்படுத்தப்பட்டு, பல்வேறுப் பகுதிகளிலிருந்து 93 காளைகளும், 42 மாடுபிடி வீரர்களும் பங்கேற்றுள்ளனர். மேலும், இப்பணியில் 100 நபர்களைக் கொண்ட 4 மருத்துவக் குழுக்களும், சுமார் 532 காவலர்களைக் கொண்ட 12 குழுக்களும் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

இவ்விழாவினை ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தி வரும் கண்டுப்பட்டி மஞ்சுவிரட்டு ஒருங்கிணைப்பு குழுவினைச் சேர்ந்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இவ்விழாவில் பங்கு பெற்றுள்ளவர்கள் அரசால் வகுக்கப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளை முறையாக பின்பற்றி, பாதுகாப்புடனும் இருந்து விழாவை சிறப்பாக நடத்திடுவதற்கு ஒவ்வொருவரும் உறுதுணையாக இருந்திட வேண்டும் என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, கண்டுப்பட்டி மஞ்சுவிரட்டு விழாவினை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாடுபிடி வீரர்கள், பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.பிரான்சிஸ் அவர்கள், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் செல்வி தே.ஜெஃபி கிரேசியா, காளையார்கோவில் வட்டாட்சியர் திரு.லெனின் மற்றும் கண்டுப்பட்டி கிராம தலைவர் திரு.சேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஊட்டி படகு இல்லத்துக்கு சுற்றுலா பயணிகள் வருகை சரிவு காரணம் என்ன?

சென்னை, ஜன.20-

இபாஸ் நடைமுறை உள்ளிட்ட காரணங்களால், ஊட்டி படகு இல்லத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை கடந்த ஆண்டு குறைந்துள்ளது.

மலைகளின் அரசி என்று அழைக்கப்படும் நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி தாவரவியல் பூங்கா, தொட்டபெட்டா, படகு இல்லம் உள்ளிட்ட பல்வேறு சுற்றுலா தலங்கள் உள்ளன. கோடை கால 'சீசன்' மாதங்களான ஏப்ரல், மே மாதங்களில் ஊட்டியில் நடக்கும் மலர் கண்காட்சி மற்றும் சுற்றுலா தலங்களுக்கு 10 லட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். ஊட்டி வரும் சுற்றுலா பயணிகளில் பெரும்பாலான வர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் கீழ் இயங்கும் ஊட்டி ஏரியில் செயல்படும் படகு இல்லத்திற்கு வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இந்த படகு இல்லத்தில், 33 மோட்டார் படகுகள், 17 துடுப்பு படகுகள், 105 மிதி படகுகள் இயக்கப்படுகின்றன. படகு இல்லத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை ஊட்டி ஏரியில் படகு சவாரி செய்யலாம். படகு சவாரியின் போது, சுற்றுலா பயணிகள் இயற்கை எழில் கொஞ்சும் அடர்ந்த மரங் களையும், மான் பூங்காவில் உள்ள கடமான்களையும், ஏரி கரையோரம் மரங்களில் அமர்ந்திருந்து ஓய்வு எடுக்கும் புள்ளி மூக்கு வாத்துகளையும் கண்டு ரசிக்க முடியும். மேலும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் சுற்றுலா பயணிகளுக்காக படகு இல்லத்தில் தனியார் மூலம் மினி ரயில் மற்றும் பிற விளையாட்டு உபகரணங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏரியின் மறு கரையில் உள்ள தேனிலவு படகு இல்லத்திலும், சிறுவர் பூங்கா உட்பட வசதிகள் உள்ளன. படகு சவாரி முடிந்து வெளியே வரும் சுற்றுலா பயணிகள் குதிரை சவாரி சென்று மகிழ்கிறார்கள்.

ஊட்டி படகு இல்லத்திற்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு குறைந்துள்ளது. நீதிமன்ற உத்தரவுப்படி, நீலகிரி மாவட்டத்திற்குள் நுழைய இபாஸ் நடைமுறை அமலுக்கு வந்தது உள்ளிட்ட காரணங் களால்,சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை குறைந்து இருக்கலாம் என கூறப்படுகிறது.

இதுகுறித்து படகு இல்ல அதிகாரிகள் கூறும் போது, "கரோனா நேரத்தில் சுற்றுலா பயணிகள் வருகை குறைந்த நிலையில், 2023ம் ஆண்டு முதல் மீண்டும் அதிகரித்தது... இதன்படி, 2023ம் ஆண்டு 23.91லட்சம் பேரும், 2024ம் ஆண்டு 23.16 லட்சம் பேரும் ஊட்டி படகு இல்லத்திற்கு வந்து படகு சவாரி மேற்கொண்டுள்ளனர்.

அதே நேரத்தில், கடந்த ஆண்டு 19.66 லட்சம் சுற்றுலா பயணிகள் மட்டுமே படகு சவாரிக்கு வந்து சென்றுள்ள னர். இபாஸ் உள்ளிட்ட கட்டுப்பாடுகள் காரணமாக, சுற்றுலா பயணிகள் வருகை குறைந்திருக்கலாம்" என்றனர்.

# கிருஷ்ணகிரியில் அதிமுக சார்பில் எம்ஜிஆர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்



கிருஷ்ணகிரி, ஜன.20-

கிருஷ்ணகிரியில் அதிமுக சார்பில் முன்னாள் முதல்வரும் புரட்சித்தலைவருமான எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக செயலாளரும் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினருமான கே.அசோக்குமார் தலைமை தாங்கினார். மாவட்ட கழக துணை செயலாளர் சாகுல் அமீது வரவேற்புரை நிகழ்த்தினார். நகர செயலாளர் கேசவன் உள்ளிட்ட ஒன்றிய செயலாளர்கள் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் அதிமுக கழக துணை பொதுச் செயலாளரும் வேப்பனஹள்ளி சட்டமன்ற உறுப்பினருமான கே.பி. முனுசாமி கலந்து கொண்டு விழா பேருரையாற்றினார். அவர் பேசுகையில், 2026ல் நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலுக்கான முதல் ஐந்து தேர்தல் வாக்குறுதிகளை அதிமுக வெளியிட்டதைப் பார்த்து திமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் மிரண்டு போயுள்ளதாக தெரிவித்தார்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித்தலைவி அம்மா ஜெயலலிதா, கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட தலைவர்கள் எப்போதும் மக்களுக்காகவே உழைத்த தலைவர்கள் என்றும், அந்த வகையில் 2026 சட்டமன்ற தேர்தலில் அதிமுக அதிக இடங்களில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும் என்றும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஆறு சட்டமன்ற தொகுதிகளும் அதிமுகவின் வெற்றி தொகுதிகளாக அமையும் என்றும் அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் தமிழ்ச்செல்வன், மாவட்ட இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலாளர் கே.பி.எம். சதீஷ்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.ராஜேந்திரன், முனிவெங்கடப்பன், மனோரஞ்சிதம் நாகராஜ், மாநில மகளிர் அணி துணை செயலாளர் பரிதா நவாப், தலைமைக் கழக பேச்சாளர்கள் அன்பழகன், சபாபதி உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

மேலும் மாவட்ட அவைத் தலைவர் காத்தவராயன், முன்னாள் மாவட்ட செயலாளர்கள் தென்னரசு, ரவிச்சந்திரன், மாவட்ட பொருளாளர் சுந்தரவடிவேல், அம்மா பேரவை மாவட்ட செயலாளர் மாதையன், மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் அணி செயலாளர் ஆஜி, அதிமுக நிர்வாகி நவாப், எம்ஜிஆர் இளைஞர் அணி மாவட்ட செயலாளர் கார்த்திக் பால்ராஜ், மாவட்ட மகளிர் அணி செயலாளர் கல்பனா உள்ளிட்ட பல்வேறு சார்பு அமைப்புகளின் மாவட்ட செயலாளர்கள், ஒன்றிய மற்றும் நகர செயலாளர்கள், முன்னாள் ஒன்றிய அவைத் தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் முடிவில் மாவட்ட துணை செயலாளர் சுமதி ராஜேந்திரன் நன்றி கூறினார்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம் சார்பாக பாரதியார் பிறந்தநாள்விழா மற்றும் அரசியல் சாசன கருத்தரங்கில் மானாமதுரை சீனி ஆசான் சிலம்பம் பள்ளியை சார்ந்த மாணவ மாணவிகளும் பயிற்சியாளர்கள் செல்வம் முனியாண்டி தலைமையில் சிலம்பம் சுற்றி தங்களுடைய திறமையை வெளிப்படுத்தினர்ஞ்இதில் சிலம்பம் தவிர பரதம்,மாணவர்களின் நடனம்,பேச்சு திறன் நிகழ்வுகள் நடந்தன..மானாமதுரை பகுதியை சார்ந்த 250 மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்..வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டனஞ்விழா இனிதே முடிவடைந்தது.




# கிருஷ்ணகிரியில் தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் கலைச் சங்கமம் பொங்கல் விழா, மதியழகன் எம் எல் ஏ பங்கேற்பு

கிருஷ்ணகிரி, ஜன.20-

கிருஷ்ணகிரியில் தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் கலைச் சங்கமம் பொங்கல் விழா நடந்தது.

கிருஷ்ணகிரி புதிய பஸ் நிலையம் அருகில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் பொங்கல் விழாவினை முன்னிட்டு கலை சங்கமம் பொங்கல் விழா நிகழ்ச்சி நடந்தது. இந்நிகழ்ச்சிக்கு பர்கூர் எம்எல்ஏ மதியழகன் மற்றும் கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான் ஆகியோர்தலைமை வகித்தனர். இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார் பில் பொங்கல் விழாவை முன்னிட்டு, ஒரே நாளில் தமிழ்நாட்டில் உள்ள 38 தமி மாவட்டங்களிலும், ழக முதல்வர் மு.க.ஸ்டா லின் உத்தரவின் பேரில், கலை சங்கமம் என்ற பெயரில் பொங்கல் விழா நடத்த உத்தரவிட்டார்.

இந்த விழாவில், பாரம்பரிய கிராமியகலை நிகழ்ச்சியான மங்கல இசை, தெருக் கூத்து, காவடியாட்டம், தப்பாட்டம், பெண்கள் கலந்துகொண்டு சிறப்பிக் கும் கோலாட்டம், பொம் மையாட்டம், சிலம்பாட் டம் போன்ற கிராமிய பராம்பரிய கலை நிகழ்ச் சிகள் நடந்தது. இந்நிகழ்ச்சியில், தாசில்தார் ரமேஷ், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற ஒரு கிணைப்பாளர் மங்கை அரிராஜன்,திமுக மாநில விவசாய அணி டேம் வெங்கடேசன்,மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் அன்பரசு,கிருஷ்ணகிரி மேற்கு நகர செயலாளர் அஸ்லம், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ் ,சித்ரா சந்திரசேகர், ஒன்றிய செயலாளர்கள் மகேந்திரன், சாந்தமூர்த்தி, மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள், துறை சார்ந்த அலுவலர் கள் கலந்துகொண்டனர்.



■ திமுக தலைமைக் கழக பொதுச் செயலாளரும், மாண்புமிகு அமைச்சருமான துரைமுருகன் அவர்களின் அறிவிப்பின்படி, கிருஷ்ணகிரி மத்திய ஒன்றிய பொறுப்பாளராக மகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து, கிருஷ்ணகிரி திமுக மத்திய ஒன்றிய செயலாளர் விசிஎன். மகேந்திரன், மாவட்ட செயலாளர் தே. மதியழகன் எம்.எல்.ஏ. அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். மத்திய ஒன்றிய நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர். இந்த மத்திய ஒன்றியத்தின் கீழ் குருபரப்பள்ளி, பிகே. செந்தனப்பள்ளி, என்னேகோல்புதூர், ஜிஞ்சுப்பள்ளி, திப்பனப்பள்ளி, பையனப்பள்ளி, கல்லுக்குறிக்கி, ஜாகிர் வெங்கடாபுரம் மற்றும் பெத்தத்தாளாப்பள்ளி ஆகிய ஊராட்சிகள் செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# அம்பலூரில் காணும் பொங்கல் முன்னிட்டு எருதுகள் அவிழ்த்து விடும் நிகழ்ச்சி

திருப்பத்தூர், ஜன.20-

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், அம்பலூர் கிராமத்தில் காணும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு எருதுகள் அவிழ்த்து விடும் நிகழ்ச்சி பாரம்பரிய முறையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சி ஏ.டி. சுப்பிரமணி ஊர் மணியம்காரர் குடும்பத்தினர், ஏ.எஸ். தண்டபாணி, ஏ.எஸ். சண்முகசுந்தரம், ஏ.எஸ். மோகன் (PRO) குடும்பத்தினர் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. முன்னதாக பிள்ளையார், எருது மற்றும் கிராம தேவதைகளை வணங்கி எருதுகள் அவிழ்த்து விடப்பட்டன.

அம்பலூர் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களான எக்லாஸ்வரம், வடக்கு பட்டு, சங்கராபுரம், மல்லங்குப்பம், கொடையாஞ்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட கன்றுகள் அவிழ்த்து விடப்பட்டன. இதனை காண சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு கண்டு களித்தனர்.

நிகழ்ச்சியின் நிறைவாக எருது உரிமையாளர்களுக்கு தேநீர் விருந்து வழங்கப்பட்டு, சால்வை அணிவித்து பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இதில் முன்னாள் கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் ஏ.ஆர். ராஜேந்திரன், ஊராட்சி மன்ற தலைவர்கள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், நாட்டாமைகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.





# பெரியகுளம் மேல் மங்கலத்தில் எம்ஜிஆர் 109 ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்

பெரியகுளம், ஜன.20-

தேனி மாவட்டம் பெரியகுளம் ஒன்றியம் மேல்மங்கலத்தில் மறைந்த முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் அவர்களின் 109வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது .இந்த கூட்டத்திற்கு மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் அன்ன பிரகாஷ் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ராஜகுரு பெரியகுளம் நகர கழகச் செயலாளர்பழனியப்பன் தலைமை தாங்கினர். தேனி நகர கழகச் செயலாளர்கிருஷ்ணகுமார் மாவட்ட விவசாய அணி செயலாளர் லட்சுமணன் வரவேற்புரையாற்றினர் சிறப்பு பேச்சாளர்களான தேனி கிழக்குமாவட்ட கழக செயலாளர் முறுக்கோடை ராமர் கழக அமைப்புச் செயலாளர் சீனிவாசன் தலைமைக் கழக பேச்சாளர் வி.சி மணிமுரசு தலைமை கழக பேச்சாளர் பூவை செழியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர் பெரிய வீரன், முத்துலட்சுமி, செல்லப்பாண்டி, பொதுக்குழு உறுப்பினர் வி .கே .தவமணி கருப்பசாமி, பேரூர் கழகச் செயலாளர்கள் பாலமுருகன், ஆண்டவர், இளைஞர் அணி இளம் பெண் பாசறை அப்பாஸ் மைதீன் மற்றும் கழக உறுப்பினர்களும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு இந்த கூட்டத்தினை சிறப்பித்தனர்.




# நாமக்கல் மேற்கு மாவட்ட சூர்யா ரசிகர்கள் 10000'திற்கும் மேற்பட்ட பழனி தைப்பூசம் பாதயாத்திரை பக்தர்களுக்கு தாராபுரத்தில் அன்னதானம் வழங்கினர்

நாமக்கல், ஜன.20-

நாமக்கல் மேற்கு மாவட்ட தலைமை சூர்யா நற்பணி இயக்கம் சார்பாக தலைவர் மா. மாரிமுத்து அவர்களின் தலைமையில் தாராபுரம்பழனி சாலையில் 10000'திற்கும் மேற்பட்ட தைப்பூச பாதயாத்திரை பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் கடலூர் தெற்கு மாவட்ட தலைவர் பெருமாள், கள்ளக்குறிச்சி மாவட்ட தலைவர் முருகன், திண்டுக்கல் மேற்கு மாவட்ட பொருளாளர் ரிஷி, திருப்பூர் தெற்கு மாவட்ட தலைவர் அருண், திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞரணி பொறுப்பாளர் குகன், தாராபுரம் நகரத் தலைவர் மனோகரன் மற்றும் அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பித்தனர்

# தாம்பரம் கிழக்கு பகுதி தி.மு.க இளைஞர் அணி சார்பில் கிரிக்கெட் திருவிழா தைப்பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது




தாம்பரம், ஜன.20-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் தாம்பரம் கிழக்கு பகுதி தி.மு.க இளைஞர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் மாணவர் அணி சார்பில் கிரிக்கெட் திருவிழா மற்றும் தைப்பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது.

மாடம்பாக்கம் பகுதி செயலாளர் நடராஜன் (எம்.சி) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கிழக்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கனகராஜ், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் தீபன் குமார் ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்தினர். விழாவில் மாநகர துணை செயலாளர் பொன்.சதாசிவம், பகுதி அவைதலைவர் ஜெயராமன், பகுதி துணை செயலாளர்கள் சாம்சன், ராஜாராம், விமலா, பகுதி பொருளாளர் நவீன், மாநகர பிரதிநிதிகள் பன்னீர் செல்வம், செந்தில்குமார், செல்வம், வேலவன், பொ. செந்தில்குமார்,மாமன்ற உறுப்பினர் ரமாதேவி செந்தில்குமார் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா மற்றும் தாம்பரம் மாநகர துணை மேயர் காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டு, கிரிக்கெட் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு முதல் பரிசு 25 ஆயிரம் ரொக்கமும் கோப்பையும், இரண்டாம் பரிசு 15 ஆயிரம் ரொக்கமும், கோப்பையும், மூன்றாவது பரிசு 5 ஆயிரம் ரொக்கமும் கோப்பையும் ஆகிய பரிசுகளை வழங்கி வீரர்களை உற்சாகப் படுத்தினர். மேலும் தைப்பொங்கல் விழாவின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றி, இளைஞர்கள் விளையாட்டிலும் கல்வியிலும் சிறந்து விளங்க வேண்டும் என வாழ்த்துரை வழங்கினர்.

இந்த விழா மாடம்பாக்கம் சுதர்சன் நகர் பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பேராசியர் பிரபு, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சத்தியபிரபு, வட்ட செயலாளர்கள் எம்.கண்ணன் (எ) சாந்தகுமார், பெருமாள், மோகனரங்கன், பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள். சிவக்குமார், மோசஸ் சின்னதுரை, சரவணக்குமார், அரிகரன், ரோஷன்குமார், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் சீனிவாசன், வெங்கட், டி.பிரிடி, ஆனந்தன், சரவணன், காமேஷ், கலை வாணன் அனிஷ்குமார், வழக்கறிஞர் கார்த்தி கேயன், பகுதி மாணவரணி துணை அமைப் பாளர்கள் தரணிதரன், அரவிந்த், ரோஷன்குமார், நந்தினி, ஜார்ஜ், சதிஷ், பகுதி மாணவரணி அமைப்பாளர் திவாகர் நன்றியுரை ஆற்றினார்.

# சூளகிரி அருகே அங்குசகரி திம்மராய சுவாமி கோவில் தேர் திருவிழா ஆலோசனை கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள்



கிருஷ்ணகிரி, ஜன.20-

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், பஸ்தலப்பள்ளி அருகே அமைந்துள்ள அங்குசகரி அருள்மிகு திம்மராய சுவாமி கோவில் தேர் திருவிழாவை முன்னிட்டு ஆலோசனை கூட்டம் 17.01.2026 ஆம் தேதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெற்றது.

அகில இந்திய மகதூர் மக்கள் அங்குசகரி திம்மராய சுவாமி சேவா டிரஸ்டின் சார்பில் நடைபெற்ற இந்த கூட்டம், டிரஸ்ட் தலைவர் K. கிருஷ்ணன் தலைமையில் நடந்தது.

கூட்டத்தில், 31.01.2026 (சனிக்கிழமை) ஸ்ரீதேவி, பூதேவி, ஸ்ரீ திம்மராய சுவாமி கல்யாண உற்சவம், 01.02.2026 (ஞாயிற்றுக்கிழமை) மதியம் 1.30 மணிக்கு ஸ்ரீதேவி, பூதேவி சமேத அருள்மிகு திம்மராய சுவாமி தேர் திருவிழா, 02.02.2026 (திங்கட்கிழமை) பல்லாக்கு உற்சவம், 03.02.2026 (செவ்வாய்க்கிழமை) தீப உற்சவம் மற்றும் வசந்தோற்சவம் நடைபெறும் என தீர்மானிக்கப்பட்டது.

மேலும், திருவிழா நடைபெறும் மூன்று நாட்களிலும் டிரஸ்டின் சார்பில் அன்னதானம் வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கோவில் வளாகத்தில் அமைக்கப்பட்ட டிரஸ்ட் அலுவலகத்தை M. தயானந்தா, மாநில தலைவர், மகதோர் குடும்பம் (கர்நாடகா) அவர்கள் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் A.M. திம்மராஜ் (பொருளாளர்) வரவேற்புரை ஆற்றினார். A.T. சிவசங்கர் (செயலாளர்) முன்னிலை வகித்தார்.

கனகலூர் ராஜண்ணா (மக்கத குடும்பம் மாநில செயலாளர் - கர்நாடகா) சிறப்பு உரையாற்றினார்.

இதில் C.K. கிருஷ்ணப்பா, ஜெய்ராஜ், K. விஷ்வநாத், ராஜேந்திரன் கொடுத்தி, T. ராமச்சந்திரன், சேகர் நாராயணப்பா, பூஜாரி வெங்கடேஷ், திம்மராயப்பா, ராமகிருஷ்ணன், மஞ்சு, சிவா, முன்னாள் பஞ்சாயத்து தலைவர் வடிவேல், தேவராஜ், குட்டப்பா, சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஆனந்தன் (தேன்கனிக்கோட்டை) நன்றி உரையாற்றினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161